மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# சங்க இலக்கியத்தில் காணப்படும் கொடைத்திறத்தினை இன்றைய வாழ்வியலுடன் ஓர் ஒப்பிட்டு

# Comparing the Generosity of Sangam Literature with Today's Lifestyle of People

பொன்னரசி கருணாகரன்/ Ponnarasi Karunakaran[1]
[1]Undergraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: ponnarasikarunakaran05@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமானது சங்க இலக்கியத்தில் காணப்படும் கொடைத்திறத்தினை இன்றைய வாழ்வியலுடன் ஒப்பிட்டு ஆராய்வதாகும். இந்த ஆய்வுக் கட்டுரையில் சங்க இலக்கியத்தில் காணப்படும் கொடைத்திறத்தினை இன்றைய வாழ்வியலுடன் ஒப்பிட்டுப் பல ஒற்றுமை வேற்றுமைகளோடு விவரிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாது, இந்த ஆய்வுக்கட்டுரையின் வழி பல வாழ்வியல் அறங்களைப் பற்றியும் அதன் விளக்கங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது. இந்த ஆய்வின் வழி, ஆய்வாளர் சங்க இலக்கியத்தில் கொடைத்திறத்தினை இன்றைய வாழ்வியலுடன் ஒப்பிட்டுப் பல தகவல்களையும் மன்னர்களின் எல்லையற்ற கொடைத்திறத்தையும் தக்க சான்றுகளோடு கண்டறிந்து விளக்குவதாகும்.
**கருச்சொற்கள்:** சங்க இலக்கியம், கொடை, கொடைத்திறம், வாழ்வியல், ஒப்பீடு

**Abstract**

This article needs sources or references that appear in credible, third-party publications. I took five previous dissertations to write this dissertation. This study aims to find many similarities and differences between the generosity found in the Sangam number and the biology of today. In this study I have researched with many explanations comparing many opinions with supporting evidence. Through this study I was able to learn about many biological virtues. Furthermore, the way of this study, many researchers have found in the Sangam literature a lot of information comparing generosity with today's biographies and a lot of information about the infinite generosity of many kings in the way of the previous study. In this way it is possible to know a lot of information.
**Keywords:** Sangam literature, Generosity, Biology, Unity, Difference, Compare

**முன்னுரை**

சங்க இலக்கியக் காலம் தமிழர் பண்பாட்டு வரலாற்றில் மிகவும் தொன்மை பொருந்திய காலமாக விளங்குகிறது. பல பரிணாமங்களைக் கடந்து வந்த தமிழர்களின் வரலாறு சங்க காலப் பகுதியில்தான் இலக்கியமாக உருவெடுத்துள்ளது. அக்காலத் தமிழர்களின் பண்பாட்டு நடைமுறைகளைத் துல்லியமாக விவரிக்கும் காலக் கண்ணாடியாகச் சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. அதன் அடிப்படையில் சங்க தமிழர்களின் வாழ்வியலைச் சங்க நூல்களிலிருந்து உணர்ந்து கொள்ளலாம் (கார்த்திகேஸ் பொன்னையா, கிங்ஸ்டன் பால் தம்புராஜ், முனீஸ்வரன் குமார், 2017). பொதுவாக, சங்க இலக்கியம் என்பது எட்டுத்தொகை (நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு); பத்துப்பாட்டு (திருமுறுகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம், நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை) ஆகிய இலக்கியப் படைப்புத் தொகுப்புகளையே குறிக்கும். எட்டுத்தொகை என்பது தனித் தனிப் பாடல்களின் தொகுப்பாக இருக்க, பத்துப்பாட்டு என்பது நீண்ட பத்துப் பாடல்களின் தொகுப்பாக உள்ளது. ஆக, சங்க இலக்கியம் என்பது எட்டுத்தொகை, பத்துப் பாட்டு சேர மொத்தம் ஒன்பது தொகை நூல்களைக் குறிப்பதாகும் (இராசேந்திரன், 2010). ஆனால், இன்றும் நம் வாழ்வியலுக்குத் தேவையான பல கருத்துகள் இருக்கும் சில நூல்களிலிருந்து நமக்குக் கிடைத்துக் கொண்டு தான் இருக்கின்றது.

கொடை என்பதன் பொருள் இரக்கக் குணத்தோடு உதவி கேட்பவர்களுக்குத் தன்னால் முயன்றதைப் பிறருக்குக் கொடுப்பதாகும். கொடை என்பதற்கு அறம், ஈகை, தருமம் என்ற பெயரும் இருக்கின்றது. கொடை என்பது ஒருவர் கொடுக்க மற்றொருவர் பெற்றுக்கொள்ளும் நிலையில் உள்ளதாகும். செல்வச்சிறப்புடன் வாழ்பவர்கள் செல்வத்துப் பயன் ஈதல் என்று பெருமிதத்தோடு செயல்புரிந்து வந்தார்கள். அவ்வாறு பிறருக்குக் கொடுப்பதில் அரசாட்சி புரிவோர் முதன்மை இடம் பெற்றுத் திகழ்ந்தனர். கொடுக்கப்படும் கொடைத்தன்மை பல்வேறு நிலைகளில் நிகழ்ந்துள்ளது. அரசன் தன்னுடைய பொருளைக் கொடையாகக் கொடுத்தல், திறைப்பொருளைக் கொடையாகக் கொடுத்தல், போர் வழியாகப் பெறப்பட்ட பொருள்களைக் கொடையாகக் கொடுத்தல் எனப் பல தன்மைகளைக் காணமுடிகிறது (மு.சசிரேகா, 2018). சங்க காலத்தில் மற்றவர்களுக்குக் கொடுத்து உதவும் பண்பும், மனப்பான்மையும் உற்றவர்களாக மக்கள் வாழ்ந்தனர். அன்றைய காலத்தில் பிறருக்கு வாரி வழங்குபவர்கள் வள்ளல் எனப்பட்டனர் (முனைவர் பா. சுடரொளி, 2019) புறப்பாடல்களில் வீரத்தைப் பற்றி மட்டுமன்றி கொடைத்திறத்தைப் பற்றியும் அதிகமாகப் பாடல்கள் பாடப்பட்டும் பல வியக்கும் அரிய நட்பினால் செய்த கொடையைப் பற்றிய பாடல்களையும் காணலாம். ஆக, சங்க இலக்கியத்தில் கொடைத்திறத்தை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**முந்தைய ஆய்வுகள்**

சங்க இலக்கியங்களைப் பற்றியும் கொடைத்திறனைப் பற்றியும் சில ஆய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. தமிழ்மொழி, இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ் (2019), தொகுதி 2 - இல் சங்க காலத்தில் மக்களின் வாழ்வியலையும், கடையேழு வள்ளல்களைப் பற்றியும் ஆராயப்பட்டிருந்தன. ஆக, இந்த ஆய்வுக் கட்டுரையில் தமிழர்களின் வாழ்வியல் முறைகளையும் கடையேழு வல்லகளின் கொடைப் பற்றியும் அறிய முடிந்தன.

அடுத்ததாக, 'சங்க கால வள்ளல்கள்' (1951), எனும் ஆய்வில், சங்க காலத்தில் காணப்படும் கொடை வள்ளல்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளன. மேலும், பல சான்றுகளோடும் நிகழ்வுகளோடும் நிரூபிக்கப்பட்டுள்ளன. இதில், பாரி, ஓரி, ஆய், காரி, நள்ளி, நெடுமான், பேகன் ஆகியோரைப்பற்றி விளக்கமாகக் கூறப்பட்டிருந்தன. உதாரணத்திற்கு, முல்லைக்குத் தேரைக் கொடுத்தவர் பாரி, ஓரியோ நாட்டையே கொடுத்தவராவார், சிவனுக்காக நீல நிறப்பட்டாடை ஈந்தவன் ஆய், காரியோ நாட்டையும் குதிரையையும் கொடுத்தவன், நள்ளி இல்லறம் நடத்த வேண்டுமென ஈந்தவன், நெடுமானோ ஔவையாருக்காக நெல்லிக்கனியைத் தந்தான், குளிரில் நடுங்கிய மயிலுக்காகப் போர்வையைத் தந்தவன் பேகன். இப்படி ஒவ்வொருவரும் பல கொடைகளைப் புரிந்தது பற்றி அறிய முடிந்தது.

'கொடையும் ஈகையும் பரிசிலும் (2018)' எனும் ஆய்வில், கொடைத்திறத்தைப் பற்றிய பல கருத்துகள் ஆராயப்பட்டன. இந்த ஆய்வுக்கட்டுரையில் கொடைத்திறத்தின் சிறப்பு, பெருமை, பண்பு, கொடையின் நோக்கம், உணவின் பங்கு போன்றவை ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளன.

**தரவுப் பகுப்பாய்வு**

**திருக்குறளில் கொடைத்திறன்**

அதிகாரம் 22 – ஒப்புரவறிதல் அதிகாரத்திலுள்ள திருக்குறள் 211, 212, 215, 216, 219 ஆகிய திருக்குறள்களில் இந்தக் கொடைத்திறனைக் காணலாம்.

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்ஆற்றுங் கொல்லோ உலகு (குறள் 211)

இக்குறளின் பொருளானது எந்த ஒரு பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் எப்படி வானிலிருந்து மழை பொழிகிறதோ அதுபோல உயர்ந்த குணம் உள்ளவர்கள் அந்த மழையைப் போல எந்தவொரு பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் உதவி செய்வார்கள். இந்தத் திருக்குறளானதை இன்றைய வாழ்வியலுடன் ஒப்பிடலாம். காரணம் இன்றும் சிலர் எந்தவொரு பிரதிபலனையும் எதிர்பார்ப்புகளையும் எண்ணாமல் உதவி செய்து வருகிறார்கள்.

உதாரணத்திற்கு, நம் பெற்றோர் சிறுவயது முதல் பட்டதாரி வரை அல்லது வாழ்வில் நல்ல நிலையில் வரும் வரை நம்மிடம் இருந்து எந்தவொரு பிரதிபலிப்பும் எதிர்பார்க்காமல் நமக்காகவே எல்லாவற்றையும் செய்து தருபவர்களாவர். பெற்றோரின் கொடையானதைப் பல பிள்ளைகள் அவர்களுக்கென ஒரு குடும்பம் வந்த பிறகு மறந்துவிட்டு அவர்களை முதியோர் இல்லத்தில் விடுவதும் இன்றைய வாழ்வியலில் ஒன்றாகி விட்டது.

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின் (குறள் 216)

இக்குறளின் பொருளானது, ஈர நெஞ்சம் கொண்டவனிடம் செல்வம் சேருமேயானால் அஃது ஊரின் நடுவே செழித்து வளர்ந்த மரம், பழுத்துக் குலுங்குவது போல எல்லோர்க்கும் பயன்படுவதாகும். இந்தத் திருக்குறளை இன்றைய வாழ்வியலுடன் ஒப்பிட முடியும். காரணம், இரக்கக் குணம் கொண்ட ஒருவரின் உதவும் குணமானது கஷ்டப்படுபவர்களுக்கு உதவி செய்யப்பட்டுப் பல பயன்களைத் தருவதாகும். உதாரணத்திற்கு, பி40 பிரிவைச் சேர்ந்த 40 குடும்பங்களுக்குத் தீபாவளியை மகிழ்ச்சியாகக் கொண்டாட மஇகா செனாய் கிளை, செனாய் கலாச்சாரச் சமூக நல இயக்கத்துடன் இணைந்து செனாய், தாமான் அமான் அமைப்புப் பகுதியில் வசிக்கும் 40 இந்திய குடும்பங்களுக்குத் தீபாவளிக்கான அத்தியாவசியப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கி உதவினார்கள். இந்தக் காலக்கட்டத்தில் வழங்கப்படும் உதவியானது பி40 மக்களின் சுமையைக் குறைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

**புறநானூற்றில் கொடைத்திறன்**

பாரி வள்ளலின் கொடைத்திறத்தினை வானில் பொழியும் மழையோடு ஒப்பிட்டுச் சங்க இலக்கியப் பாடல் அமைந்துள்ளது. காரணம் வானிலிருந்து பொழியும் மழையானது அனைவருக்கும் பொதுவதாகத்தான் பொழியுமே தவிர, குறிப்பிட்டு ஒருவருக்குப் பொழியப்படுவதில்லை. அதுபோலவே, பாரியின் கொடைத்திறமானது அனைவருக்கும் எந்தவொரு பாகுபாடும் இல்லாமல் அமையப்பட்டதாகும். (சங்க கால வள்ளல்கள் (1951).

பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டுஈண்டு உலகுபுரப் பதுவே (புறநானூறு, பாடல்134)

என்ற இந்தப் புறநானூற்றுப் பாடலைப் பாடியவர் கபிலராவார். இந்தப் பாடலானது பறம்பு நாட்டு மன்னனின் வள்ளலைப் பற்றியதாகும். பாரி என்பவர் வேளிர் என்றழைக்கப்படும் குல மக்களைச் சேர்ந்திருப்பதால் இவரை வேள்பாரி என்றழைப்பார்கள். இவர் கடையேழு வள்ளல்களில் ஒருவராக சங்க இலக்கியத்தில் போற்றப்படுபவர். அதற்குத் தக்க சான்றாக விளங்கியது அவரின் கொடைத்திறமானதுதான். அதாவது, முல்லைக் கொடிகளுக்காகத் தமது தேரைத் தந்துவிட்டார். இதனால், இந்தச் செய்தி பலரையும் வியப்பில் ஆழ்த்தியும்

அவரின் புகழ் பரவி வழிவகுத்துள்ளது. ஒரு முல்லைக் கொடிக்காகத் தாம் வந்த தேரையே கொடுத்தது வள்ளல்களிலேயே தலைசிறந்தவராகப் போற்றப்பட வைத்தது.

இப்பொழுது இந்தச் சங்க இலக்கியக் கொடைத்திறத்தினை இன்றைய வாழ்வியலுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அந்தக் காலத்தில் வாழ்ந்த நம் முன்னோர்கள் எவ்வளவு இலகிய மனத்தோடு இருந்துள்ளார்கள் என்று வியக்கும் வண்ணம் பாரியின் கொடைத்திறம் அமைந்துள்ளது. சங்க இலக்கியத்தில் காணப்படும் தேரை நாம் இன்றைய வாழ்வியலில் மகிழுந்தோடு ஒப்பிடுவோம். இன்றைய நவீன உலகில் பலரின் வீட்டிலும் மகிழுந்து இருக்கின்றது. அந்த மகிழுந்துவின் கீழே அல்லது நிறுத்துமிடத்தில் ஏதாவது கொடி, கம்பியே இருந்தால் அதை எடுத்து வீசி எறிவோமே தவிர அதற்காக யாரும் தங்களின் மகிழுந்தையே விட்டுப் போகும் அளவிற்குக் கொடைத்திறம் கொண்டவர்களாக இல்லை. காரணம், அன்றைய சங்க இலக்கியத்தில் காணப்படும் கொடைத்திறத்திற்குச் சுயநலமில்லாத பொதுநலம் அல்லது பிற உயிரை மதித்தல் போன்றது பெரியதாக இருந்தது. ஆனால், இன்றைய வாழ்வியலில் மக்களுக்குத் தனக்குப் பிறகு தான் மற்றவர்கள் என்ற எண்ணம் கொண்டிருக்கின்றனர். அதனால், இன்றைய வாழ்வியலோடு அன்றைய சங்க இலக்கியக் கொடைத்திறத்தை ஒப்பிடும் பொழுது அன்றைய காலம் போல் கொடைத்திறத்தினைக் காண முடியவில்லை.

அதியமானும் கடையேழு மன்னர்களில் ஒருவராவார். இவருக்கு அதியன், அஞ்சி, எழினி என்ற பெயர்களும் உள்ளன. அதியமான் தன்னைக் காண வரும் புலவர்களுக்குப் பல பொற்காசுகளையும் செல்வங்களையும் வழங்கித் தமது கொடைத்திறத்தினை வெளிப்படுத்தியுள்ளார். தகடூரின் அருகில் குதிரைமலை என்ற பெயரில் மலை ஒன்று இருந்தது. அங்குள்ள இடத்தில் பல நெல்லிக்கனிகள் இருக்கும் மரங்கள் இருந்தன. ஆனால், அந்த இடத்திற்கு மனிதர்களால் சுலபமாகச் செல்ல இயலாது. அந்த நெல்லிக்கனியின் சிறப்பு அந்தக் கனிகளைச் சாப்பிட்டவர் நீண்ட ஆயுளுடன் வாழ முடியும் என்ற தகவலை அதியமானிடம் அறிஞர் ஒருவர் கூறினார். ஒருநாள், குதிரைமலைக்குச் சென்ற அதியமான் வரும் வழியில் அந்த நெல்லிக்கனிகளைக் கண்டான். அதைச் சிரமப்பட்டுப் பறித்து விட்டான். அந்த நீண்ட ஆயுளைத் தரும் நெல்லிக்கனியானதை அவனே சாப்பிட விரும்பவில்லை. அவன் அரண்மனைக்குச் சென்ற பின்னர், ஔவையாரைத் தேடினான். அவரிடம் பறித்து வந்த நெல்லிக்கனியைக் கொடுத்துச் சாப்பிட சொன்னான்.

ஔவையாரும் அந்த நெல்லிக்கனியின் சிறப்பை அறியாமல் உண்டுவிட்டார். அவர் உண்ட பின்னரே, அதியமான் அதன் சிறப்பைக் கூறினான். இதைக் கேட்ட ஔவையாரோ, வேதனைப்பட்டார். அதியமான் நீண்ட நாள் உயிரோடு இருந்தால் அவன் பல புலவர்களுக்கு உறுதுணையாக இருந்திருக்கலாம், அவன் நாட்டு மக்களைச் சரிவரப் பார்த்துக் கொள்ளலாம், இன்னும் பல நன்மைகளை அவன் புரிந்திருக்கலாமே என்று எண்ணி வேதனையில் இருந்தார். அவன் நீண்ட நாள் உயிரோட இருந்தால் அவனைச் சார்ந்தவர்கள் மட்டும் நன்மை பெறுவார்கள். ஆனால், ஔவையார் நீண்ட நாள் வாழும் ஆயுள் பெற்றால் தமிழ்மொழியில் பல புதிய படைப்புகளும், தமிழகமும் தமிழ்மொழியும் வளமை பெறும் என்று

அவன் கூறியதும் அவர்களின் நட்பிலுள்ள அன்பும் பெருந்தன்மையும் தெரிகின்றது. (அசோக வாசகம் (1957)

> இனிப், பாடுநரும் இல்லை; படுநர்க்குஒன்று ஈகுநரும் இல்லை;
> பனித்துறைப் பகன்றை நறைக் கொள் மாமலர்
> சூடாது வைகியாங்குப், பிறர்க்கு ஒன்று
> ஈயாது வீயும் உயிர்தவப் பலவே! (புறநானூறு பாடல் 235)

அதியமான் ஔவையாரின் நட்பானதும் அதியமான் ஔவையாருக்குக் கொடுத்த நெல்லிக்கனியையும் இன்று இந்தத் தலைமுறையினர் நினைத்தால் வியந்து பார்க்கும் வண்ணமே உள்ளது. இதனை இன்றைய வாழ்வியலோடு ஒப்பிட முடியாது. காரணம், இன்றைய பெரும்பாலான நட்பானது சுயநலமிக்கதாகும் தன்னை விட மற்றொருவர் உயர்ந்த நிலையில் இருந்தால் அவர் நண்பராக இருந்தாலும் அவரை வீழ்த்த, பல சூழ்ச்சிகளைச் செய்கின்றனர்.

### நிறைவுரை

இந்த ஆய்வு சங்க இலக்கியத்தில் கொடைத்திறத்தினை இன்றைய வாழ்வியலுடன் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளது. நாம் வாழும் வாழ்க்கையில் என்றும் கொடைத்திறத்தோடு வாழ்தல் வேண்டும் என்பதை இந்த ஆய்வுக்கட்டுரையின் வழி அறியலாம். இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கங்களும் அடைய முடிந்தது. ஆனால், இன்றைய வாழ்வியலில் கொடைத்திறமானது பிறருக்கு என்பதைக் காட்டிலும் எனக்கு என்ற சுயநலத்தில் தான் இயங்கி வருகின்றது. இன்னும் சிலர் வெறும் விளம்பரத்திற்குத்தான் கொடை என்ற பெயரில் பிறருக்குக் கொடுத்து வருகின்றனர். அதனால், மாற்றத்தை நம்மிடமிருந்து துவங்கினால் சிறப்பாக இருக்கும். கொடைத்திறத்தினை அனைவரும் பின்பற்றினால் சுயநலமில்லாத ஒரு வாழ்க்கையை வாழலாம்.

### துணைநூற்பட்டியல்


அசோக வாசகம் (1957). வி.சு.சுவாமிநாதன் பாரதி பிரஸ், மதுரை

அம்மையப்பர் அகம், (1951). சங்க கால வள்ளல்கள். அவதானம் பாப்பையர் தெரு, சென்னை.(http://www.tamilvu.org/library/nationalized/pdf/06palurkannappamudaliyar/sangakaalavallalkal.pdf)

இராசேந்திரன், (2014). புறநானூறு. சென்னை : கலைஞன் பதிப்பகம்.

கார்த்திகேஸ் பொன்னையா, கிங்ஸ்டன் பால் தம்புராஜ், முனீஸ்வரன் குமார், (2017). சங்க இலக்கியங்களில் வெறியாட்டுக் குறிப்புகள்

மு.சசிரேகா, (2018). கொடையும் ஈகையும் பரிசிலும் - சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ். Vol 1, ISSN: 2454 - 3993

முனைவர் கோ. விசயராகவன், (2019). தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ். E-ISSN: 2581-7140

முனைவர் பா. சுடரொளி, (2019). கடையேழு வள்ளல்கள்- சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ். Vol 11, ISSN: 2454 - 3993